ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேடரிங்


# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 48 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Feb 28-March 5, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-


Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

## கோவை வரலாற்றில் முதல்முறையாக மேயர் பதவி வகிக்கும் திமுக

# யார் அந்த அதிர்ஷ்டசாலி?


இலக்குமி இளஞ்செல்வி


மீனா லோகு


நிவேதா சேனாதிபதி

சென்னைக்கு அடுத்து எல்லை அளவிலும், வருவாய் அளவிலும் கோவை தான் பெரிய மாநகராட்சி என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது. கொங்கு மண்டலத்தின் முக்கிய நகராக கோவை திகழ்வதால் இம்மாநகராட்சியில் மேயர் பதவியை கைப்பற்ற முக்கிய அரசியல் கட்சிகள் இடையே கடும் போட்டி நிலவும்.

கோவை மாநகராட்சி மேயர் பதவியை இதுவரை திமுக அலங்கரித்தது இல்லை. 1996, 2006 ஆம் ஆண்டுகளில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் திமுக கூட்டணி இம்மாநகராட்சியை கைப்பற்றிய போதும் 1996 இல் தமாகா கட்சிக்கும், 2006 இல் காங்கிரசுக்கும் இம்மாநகராட்சியின் மேயர் பதவி ஒதுக்கப்பட்டது.

இதற்கிடையே 2001, 2011 ஆம் ஆண்டுகளில் இங்கு மேயர் பதவியை அதிமுக அலங்கரித்தது. இந்நிலையில் 2021 பேரவைத் தேர்தலில் மாநிலம் முழுவதும் திமுக பெரும்பான்மை இடங்களில் கைப்பற்றியபோதும், கொங்கு மண்டலத்தில் பின்னடைவை சந்தித்தது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு கோவையின் பொறுப்பு அமைச்சராக பணியமர்த்தப்பட்ட அமைச்சர் செந்தில்பாலாஜி, ஒரு லட்சம் பேரிடம் மனுக்கள் வாங்கி அவற்றுக்கு தீர்வுகண்டது, மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டது என பல்வேறு உத்திகளை கையாண்டார். இதற்கு கைமேல் பலன் கிடைக்கும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 100 வார்டுகளில் 96 இடங்களை திமுக கூட்டணி கைப்பற்றி மிகப்பெரிய சாதனை படைத்தது.

கோவையில் திமுக தனித்து பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர் பதவிகளை கைப்பற்றிய நிலையில் திமுகவில் இருந்து தான் புதிய மேயர் தேர்வு செய்யப்படவுள்ளார். இதனால், முதல் திமுக மேயர் யார் என்பதை அறிய கொங்கு மண்டலமே காத்திருக்கிறது. கோவை மேயர் பதவி பொதுப்பிரிவு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பதால் புதிய மேயருக்கான போட்டியில் மூன்று பெண்கள் கடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

22 வயதில் மாமன்ற உறுப்பினராக தேர்வாகியுள்ள நிவேதா சேனாதிபதி, முன்னாள் துணை மேயரும், கோவை மாநகர் மாவட்ட திமுக பொறுப்பாளரின் மனைவியுமான இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், 4 முறை மாமன்ற உறுப்பினர் என்ற அனுபவத்துடன் மீனா லோகு ஆகிய மூவரில் ஒருவரே கோவை மேயராக வரக்கூடும் என்கின்றனர் கோவை மாவட்ட திமுக நிர்வாகிகள்.

மார்ச் 4ம் தேதி மேயர், நகர்மன்ற தலைவர், உள்ளிட்ட பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் இப்போதே பரபரப்பு அதிகரித்து வருகிறது.

**நிவேதா சேனாதிபதி:**

கோவை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் மருதமலை சேனாதிபதியின் மகளான நிவேதா சேனாதிபதி 97 வது வார்டில் போட்டியிட்டு 8,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிக்கனி பறித்திருக்கிறார். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை உளவியல் இரண்டாம் ஆண்டு படித்து வரும் நிவேதா மேயர் ரேஸில் முந்துகிறார். இளம் வயது உடைய இவரை மேயர் பதவியில் அமர்த்தினால் இளம் தலைமுறை வாக்காளர்களை திமுகவால் கவர முடியும். இளம் பெண் அரசியல்வாதியை உருவாக்கினால் கோவையில் நீண்ட காலம் அரசியல் செய்ய வசதியாக இருக்கும் என்றும் கட்சித் தலைமைக்கு பெருவாரியான நிர்வாகிகள் ஓங்கி குரல் கொடுத்து வருகின்றனர்.

**மீனா லோகு:**

கோவை மாநகராட்சி 46 வது வார்டில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள மீனா லோகு ஏற்கனவே மூன்று முறை மாமன்ற உறுப்பினராக இருந்தவர். முதுகலை தமிழ் ஆசிரியர் பணியை துறந்துவிட்டு அரசியலுக்கு வந்தவர். இதனால் இவரது பெயர் மேயர் பதவிக்கான பரிசீலனையில் இடம்பெறும் எனத் தெரிகிறது.

முதலியார் சமூகத்தை சேர்ந்த அவர், கொங்கு வேளாளர் கவுண்டர் சமூகத்தை சேர்ந்த லோகுவை காதல் திருமணம் செய்தவர். பலமுறை மாமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளதால் நிர்வாக நடைமுறையை இவரால் எளிதில் கையாள முடியும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கிறது.

**இலக்குமி இளஞ்செல்வி:**

இதேபோல் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், முன்னாள் துணை மேயரும், திமுக மாநகர் மாவட்டச் செயலாளருமான சிங்காநல்லூர் கார்த்திக்கின் மனைவி இலக்குமி இளஞ்செல்வியும் மேயர் ரேஸில் பிரதான இடத்தில் இருக்கிறார். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் மகேந்திரனால் தனது வெற்றிவாய்ப்பை சிங்காநல்லூரில் இழந்த கார்த்திக், அமைச்சராகும் வாய்ப்பையும் நழுவவிட்டார்.

இந்நிலையில் இந்த முறை தனது மனைவி இலக்குமி இளஞ்செல்வியை கோவை மேயராக்குவது என்ற தீர்மானத்தோடு காய் நகர்த்தி வருகிறார். கார்த்திக்கின் மனைவி கோவை மாநகராட்சி 52 வது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். நாயுடு சமூகத்தைச் சேர்ந்த இவருக்கு கொடுத்தால் கட்சியை பலமாக வளர்க்க முடியும் என்ற குரலும் கோவையில் இருந்து சென்னை அறிவாலயம் நோக்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

மாநிலம் முழுவதும் 21 மாநகராட்சிகளிலும் மேயர் பதவியை கட்சித் தலைமையே முடிவு செய்ய இருப்பதால் கோவை மேயரையும் முதல்வர் ஸ்டாலின் தான் இறுதி செய்வார். கோவைக்கு இளவயது மேயரை தேர்வு செய்யப்போகிறாரா, அனுபவம் அடிப்படையில் மீனா லோகுவுக்கு வாய்ப்பு கிடைக்குமா, சமூகப் பார்வையில் இலக்குமி இளஞ்செல்விக்கு வாய்ப்பு வழங்கப்படுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## உள்ளாட்சித் தேர்தல் முடிவு ஒரு பார்வை!

**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**

நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 12,838 பதவிகளுக்கு தேர்தல் நடந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் திமுக கூட்டணி மாநகராட்சிகளில் 80 சதவீத வெற்றிகளையும், நகராட்சியில் 70 சதவீத வெற்றிகளையும், பேரூராட்சிகளில் 65 சதவீத வெற்றிகளையும் பெற்றுள்ளன. அதிமுகவைப் பொறுத்தவரை 15 சதவீத வெற்றியை பெற்றுள்ளது. மறைமுகத் தேர்தலாக நடந்தது திமுகவுக்கு மிகப்பெரிய லாபமாக இருந்தது.

நகர்ப்புறத்துக்கு மட்டுமே நடந்த தேர்தல் என்பதாலும், மறைமுகத் தேர்தல் என்பதாலும் இதன் முடிவுகளை ஒட்டுமொத்த தமிழகத்துக்கான முடிவாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால், அதேவேளையில் தமிழக அரசியலின் எதிர்கால போக்கு குறித்த சில ரேகைகளை நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

குறிப்பாக அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, கே.என்.நேரு ஆகிய இருவரும் அதிமுகவின் கோட்டையாக திகழ்ந்த கோவை, சேலம் மாநகராட்சிகளில் மிகப்பெரிய வெற்றியை திமுகவுக்கு பெற்றுத் தந்ததை அக்கட்சியினர் மிகப்பெரிய சாதனையாக பார்க்கின்றனர். அதிமுகவைப் பொறுத்தவரை பாஜக இன்றி திமுகவை எதிர்கொள்வது சிரமம் என்ற சூழல் உருவாகியுள்ளன.

பாஜக இல்லாமல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, கோவை, பொள்ளாச்சி, நீலகிரி, ஈரோடு, தென்சென்னை, மத்திய சென்னை, மதுரை ஆகிய 10 மக்களவைத் தொகுதிகளில் திமுகவை, அதிமுகவால் எதிர்கொள்ள இயலாது என்ற சூழல் உருவாகியுள்ளது. இந்த பகுதிகளில் பாஜகவின் வாக்கு வங்கி அபரிமிதமாக உயர்ந்துள்ளது தமிழக அரசியலில் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது.

இந்த அளவுக்கு வாக்கு வங்கி உயர்வதற்கு காரணம் என்ன என்பதை ஆய்வு செய்தால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப்பின் கடந்த 5 ஆண்டுகளாக பாஜக செய்து வரும் அரசியல் நகர்வுகள் தான் முக்கியக் காரணம். 2004 மக்களவைத் தேர்தலுக்குப் பின் கூட்டணியின்றி தவித்துக் கொண்டிருந்த பாஜகவுக்கு, அதிமுக கூட்டணி கிடைத்தது. அத்தேர்தலில் தோல்வி ஏற்பட்டாலும் கூட 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணி 40 சதவீத வாக்கு வங்கியை எட்டுவதற்கு உந்து சக்தியாக இருந்தது பாஜக தான் என்பது மறுக்க முடியாத உண்மை.

உத்தரப்பிரதேசம், பீகார், மகாராஷ்டிரம் போன்ற வடமாநிலங்களில் இந்து ஒற்றுமை அடிப்படையை மையமாக வைத்து சமூக ரீதியான கட்டமைப்பு செய்து வாக்கு வங்கியை உயர்த்துவது போல தமிழகத்திலும் சப்தமின்றி சமூக ரீதியாக வாக்கு வங்கியை உயர்த்தும் முயற்சியில் இறங்கியது பாஜக.

கொங்கு மண்டலத்தில் அருந்ததியர் வாக்கு வங்கியை குறிவைத்து மாநிலத் தலைவராக எல்.முருகனை நியமித்தது, பின்னர் மத்திய அமைச்சர் பதவி வழங்கியது, கொங்கு வேளாளர் மற்றும் பிற சமூகங்களில் இருக்கும் படித்த இளைஞர்களை கவரும் வகையில் கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த இளம் ஐபிஎஸ் அதிகாரியான கே.அண்ணாமலைக்கு மாநிலத் தலைவர் பதவியை வழங்கியது, தென்மாவட்டங்களில் திராவிட கட்சிகளால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த தேவேந்திரகுல வேளாளர்களுக்கு அவர்களது சமூகப் பெயர் மாற்றத்துக்கு உதவியது உள்ளிட்ட வாக்கு வங்கியை உயர்த்த உதவும் பல்வேறு சமூக ரீதியான அசைவுகளை பாஜக செய்துகொண்டே இருக்கிறது.

காலம் காலமாக திமுக எதிர்ப்பு என்ற அடிப்படையில் அதிமுகவுக்கு வாக்களித்து வந்த பிராமணர்கள், ஜெயலலிதா மறைவுக்குப்பின் அதிமுகவில் தங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் இருப்பதை உணர்ந்து, அச்சமூக வாக்குகளையும் இந்த முறை பெரும்பான்மையாக கவர்ந்திழுத்திருக்கிறது பாஜக.

இதுபோன்ற பல்வேறு காரணங்களால் தென்மாவட்டங்கள், கொங்கு மண்டலம் மற்றும் தென்சென்னை மக்களவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளில் பாஜக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மாமன்ற, நகர்மன்ற, பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளை கைப்பற்றியுள்ளது.

**தேவேந்திரகுல வாக்கு வங்கி:**

கன்னியாக்குமரி மாவட்டத்தில் உள்ள ஹிந்து நாடார்கள் பாஜக தொடங்கப்பட்ட காலம் முதலே அக்கட்சிக்கு வாக்களித்து வருகின்றனர் என்பது தெரிந்த விஷயம் தான். ஆனால், இப்போது அதை தாண்டியும் ஹிந்து நாடார் வாக்கு வங்கி பாஜகவை நோக்கி நகர்ந்துள்ளது தெரியவந்துள்ளது.

விருதுநகர் மாநகராட்சியில் ஒரு மாமன்ற உறுப்பினர் பதவி, திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை, பணக்குடி, முக்குடல், வடக்கு வள்ளியூர், தூத்துக்குடி மாவட்டத்தில் கானம், தென்திருப்பேரவை, ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய பேரூராட்சிகளில் பாஜக குறிப்பிடத்தக்க பேரூராட்சி உறுப்பினர் பதவிகளை கைப்பற்றியுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சியில் 9 சதவீத வாக்குகளை பாஜக பெற்றுள்ளது. இது தேவேந்திரகுல வேளாளர், ஹிந்து நாடார் சமூக வாக்குகள் பங்களிப்பு இன்றி இந்த அளவுக்கு பாஜகவால் வாக்கு வங்கி பெற முடியாது என்பதே உண்மை.

அதேபோல, தேவேந்திர குல வேளாளர்கள் பாஜகவின் வாக்கு வங்கியாக மாறியிருக்கின்றனர் என்பதற்கான சான்றுகளும் தேர்தல் முடிவில் தெரியவந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம், ஸ்ரீவைகுண்டம், தென்காசி மாவட்டத்தில் சாம்பவர் வடகரை, எஸ்.புதூர், மேலகரம், வடகரை கீழ்பிடாகை, கமுதி பேரூராட்சிகள், ராமநாதபுரம், பரமக்குடி நகராட்சிகளிலும் இந்த முறை பாஜக தடம் பதித்துள்ளது. கடலூர் மாநகராட்சியில் ஆதிதிராவிடருக்கு ஒதுக்கப்பட்ட 28 வது வார்டில் அதிமுக, காங்கிரசை டெபாசிட் இழக்க வைத்து முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது தாமரை சின்னம் என்பதை பார்க்கும்போது வடதமிழகத்திலும் பாஜக வளருவதற்கான அடித்தளம் உருவாகியிருப்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளது.

**திரண்ட பிராமணர் வாக்கு வங்கி:**

அதேபோல, ஜெயலலிதா மறைவுக்குப் பின் இரட்டை இலையை தவிர்த்துவிட்டு, தாமரைக்கு இந்த முறை பிராமணர்களும் ஒன்று திரண்டு வாக்களித்துள்ளனர். பிராமணர்கள் பெரும்பான்மையாக உள்ள சென்னை மாநகராட்சியில் 134 வது வார்டில் பாஜக வேட்பாளர் உமா ஆனந்த் வெற்றி பெற்றுள்ளதே இதற்கு மிகச்சிறந்த உதாரணம்.

மேலும், சென்னை மாநகராட்சியில், தென்சென்னை மக்களவைத் தொகுதி மற்றும் துறைமுகம் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 19 வார்டுகளில் பாஜக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு சென்னை மாநகராட்சியில் 8 சதவீத வாக்குகளையும் பாஜக பெற்றுள்ளது. அதேபோல, ஸ்ரீரங்கம் நகராட்சியில் 1, 2 வது வார்டுகளில் 2 வது இடத்தை பாஜக பிடித்துள்ளது.

**கொங்கு மண்டலம்:**

இதேபோல, கொங்கு மண்டலத்தில் வெற்றிகளை பெற முடியாவிட்டாலும், பாஜகவின் வாக்கு வங்கி கணிசமாகவே உயர்ந்துள்ளது. குறிப்பாக கோவை மாநகராட்சியில் 9 சதவீத வாக்கு வங்கி பெற்றது, திருப்பூர் மாநகராட்சியில் 2 மாமன்ற உறுப்பினர்களை கைப்பற்றியதுடன் ஒரு வார்டில் 2 வது இடத்தையும் பெற்றது, ஈரோடு மாநகராட்சியில் வார்டுகளை கைப்பற்றாவிட்டாலும் 2011 உள்ளாட்சித் தேர்தலுடன் ஒப்பிடும் போது பாஜகவின் வாக்கு வங்கி உயர்ந்திருப்பது, திருப்பூர், ஈரோடு மாநகராட்சிகளில் சுமார் 6 சதவீதம் பெற்றுள்ளது உள்ளிட்டவற்றை வைத்து பார்க்கும்போது கொங்கு மண்டலத்தில் பாஜக ஆழமாக வேரூன்றி வளரத் தொடங்கியிருப்பதை உணரலாம்.

கொங்கு மண்டலத்தில் 2011 முதல் இதுவரை நடந்துள்ள சட்டப்பேரவை, மக்களவை, உள்ளாட்சித் தேர்தல் இவற்றை முழுமையாக ஆய்வு செய்தால் தொடர்ந்து 2019 க்கு பிறகு பாஜகவின் வாக்கு வங்கி சீராக உயர்ந்து வருகிறது என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

**நாம் தமிழர் கட்சி:**

மாநிலம் முழுவதும் சீரான வாக்கு வங்கியை வைத்திருந்தாலும் ஒன்மேன் ஆர்மி என்ற அடிப்படையில் தான் இயங்குகிறது. உள்ளூர் செல்வாக்கு மிகுந்த இரண்டாம் கட்டத் தலைவர்கள் யாரும் இல்லாததால் அக்கட்சியால் உள்ளாட்சித் தேர்தல்களை குறிப்பாக உள்ளாட்சியில் மறைமுக தேர்தலை எதிர்கொள்வது மிகப்பெரிய சிரமமாகவே இருந்தது என்பதை இத்தேர்தல் முடிவு காட்டுகிறது.

2019 ஊரக உள்ளாட்சித் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு ஒரே ஒரு ஒன்றியக்குழு உறுப்பினர் பதவி தான் கிடைத்தது. ஆனால், அடுத்து நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அக்கட்சிக்கு 6.85 சதவீத வாக்கு வங்கி கிடைத்தது. அதேபோல இந்த முறை 6 பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளை கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் இருந்து அக்கட்சி பெற்றுள்ளது. மீண்டும் ஒரு பொதுத் தேர்தலில் தான் அக்கட்சியின் பலத்தை கணக்கிட முடியும்.

**பாஜக இல்லாமல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, கோவை, பொள்ளாச்சி, நீலகிரி, ஈரோடு, தென்சென்னை, மத்திய சென்னை, மதுரை ஆகிய 10 மக்களவைத் தொகுதிகளில் திமுகவை, அதிமுகவால் எதிர்கொள்ள இயலாது என்ற சூழல் உருவாகியுள்ளது. இது தமிழக அரசியலில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

**பாமக:**

இக்கட்சி நகர்ப்புறத்தில் செல்வாக்கு கொண்ட கட்சி அல்ல. காரணம், 2011 உள்ளாட்சித் தேர்தலில், நகர்புற உள்ளாட்சிகளில் 2 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. ஆகையால் பாமகவுக்கு சிறு சறுக்கல் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால், பாமக தனது வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அதிமுகவிடம் இழந்துள்ளது என்பதே உண்மை. இது அடுத்து வரும் பொதுத்தேர்தல்களில் அதிமுகவுடன் இணைந்து பயணிக்க வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கியுள்ளது.

வன்னியர்கள் அதிமுகவை தங்களது சொந்த கட்சியாக பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. தருமபுரி நகராட்சியில் அதிமுக வலுவான போட்டியை கொடுத்து பாமக அங்கு வீழ்ந்துள்ளதே இதற்கு சிறந்த உதாரணம். பாமகவை பொறுத்தவரை 5 மாநகராட்சி உறுப்பினர்கள், 48 நகர்மன்ற உறுப்பினர்கள், 73 பேரூராட்சி உறுப்பினர்கள் என 128 பதவிகளை பெற்றுள்ளது. அக்கட்சிக்கு என சாதிய பலம் இருப்பதால் தான் ஓரளவாவது இக்கட்சி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தாக்குப் பிடித்துள்ளது.

**அமமுக:**

3 மாநகராட்சி உறுப்பினர்கள், 33 நகர்மன்ற உறுப்பினர்கள், 66 பேரூராட்சி உறுப்பினர்கள் என 102 பதவிகளை கைப்பற்றியுள்ளது. மேலும், ஒரத்தநாடு பேரூராட்சியை கைப்பற்றியுள்ளது. அங்கு 2011 முதல் 2016 வரையிலான காலகட்டத்தில் பேரூராட்சித் தலைவராக இருந்த சேகர் செல்வாக்கானவர் என்பதும், அப்பகுதியில் அவருக்கு நல்ல பெயர் இருப்பதும் தெரியவந்துள்ளது. இதுபோன்ற செல்வாக்கு மிக்க நபர்கள் அமமுகவில் இருப்பதும், டெல்டா மற்றும் தென்மாவட்டங்களில் சாதிய பலத்துடன் அமமுகவுக்கு வாக்குகள் கிடைப்பதும் ஓரளவு பதவிகளை பெற காரணம்.

**தேமுதிக, ம.நீ.ம:**

தேமுதிகவை பொறுத்தவரை 33 உறுப்பினர் பதவிகளை பெற்றுள்ளது. மக்கள் நீதி மய்யத்தை பொறுத்தவரை நகர்ப்புற கட்சியாகவும், நடிகர் கமல்ஹாசன் என்ற ஒற்றை பிம்பத்தை நம்பியே அக்கட்சி நகர்கிறது என்பதும் தெரிந்த உண்மை. இந்த தேர்தலில் பூஜ்ஜியம் பெற்றிருந்தாலும், கமலின் அரசியல் ராஜ்ஜியத்துக்கு இத்தேர்தல் முற்றுப்புள்ளியாக இருக்கும் என சொல்ல இயலாது. காரணம், 2024 மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுக கட்சிகளில் கூட்டணி அரசியலில் முக்கியத்துவம் கிடைக்கும்.

தனித்து நின்ற கட்சிகளில் பதவிகளின் எண்ணிக்கை அடிப்படையில் பார்க்கும்போது பாமக மூன்றாவது பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது என்பதே உண்மை. இந்த தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்தால் 2024, 2026 பொதுத்தேர்தல்களில் அதிமுக அதிகாரத்துக்கு வரும் அளவுக்கு வெற்றியை பெற வேண்டுமெனில் பாஜக, பாமக ஆகியவற்றை அரவணைத்து செல்வது மிகவும் அவசியம் என்பதையே உணர்த்துகிறது. அதேபோல, நடிகர் கமலின் ம.நீ.ம, டிடிவி. தினகரனின் அமமுக ஆகிய கட்சிகளுக்கும் இனிவரும் பொதுத் தேர்தல்களில் திமுக, அதிமுக கூட்டணியில் வலிமையை உயர்த்தும் வாய்ப்பு கிடைக்கும்.

PSG Staff Day 2022

# Have Great Pride in loyally serving an Institution

## - Iakoka Subramaniam, Chairman, Sagodharan Trust

The Covai Mail

"The growth of any Institution is due to committed hard work of members of faculty and staff," expressed L.Gopalakrishnan, the Managing Trustee of PSG & Sons' Charities at the PSG Staff Day Celebrations 2022.

"We celebrate this day every year (on Feb 20th) to rededicate ourselves to the ideals cherished by Dr.GRD and remember the contribution of staff members and felicitate those who have put in long years of service," he added.

On Feb 20, PSG Institutions cherishes the birthday of Prof. G.R.Damodaran, Founder of PSG CAS and PSG Tech as Staff Day. On this day the hard work of the staff of PSG Institutions is recognized and appreciated, and a special honor is conferred on the staff who have completed 25 years of service at the institutions.

At the occasion Prof. Radhakrishnan, Director, PSG Institute of Advanced Studies who has served PSG for more than 5 decades under various capacities was bestowed with the prestigious Lifetime Achievement Award by PSG & Sons' Charities. Its Managing Trustee L.Gopalakrishnan and the Chief Guest Iakoka Subramaniam, Chairman, Sagodharan Trust presented the award.

Prof.Radhakrishnan served PSG College of Technology as its principal between 1994 and 2002, and then he went on to helm PSG Institute of Advanced Studies.

He was instrumental in developing several UG and PG programs at PSG Tech. initiating collaboration with universities abroad and setting up several advanced and specialized laboratories.

He has been a Teacher, Engineer, Administrator, Leader and a loyal member of PSG family. His philosophy has always been 'Work is Worship', Prof. PV Mohanram, Secretary of PSG iTech shared.

At the event 78 members of faculty and staff of various PSG Institutions were honored.

## Teachers remain the Evergreen Heroes

-Iakoka Subramaniam



Quoting the words of American writer Ralph Waldo Emerson, "Every hero becomes a bore at last", Iakoka Subramaniam said that only teachers have the privilege to remain evergreen heroes in the hearts of the students they have groomed. The empowered students always appreciate their teachers' rendering of wisdom and guidance, and in that way the teachers remain the timeless heroes in their lives.

Talking about teachers, he said Prof.Radhakrishnan personifies all the virtues of Teacher, and he is a person who always thinks about enhancing the educational practices at PSG Tech and PSG IAS.

"We live in the times where serving an organization for longer years is not considered highly; but I tell you today that there is a great pride in being a part of an institution for 25 years, serving it loyally and play a role in its elevation. There is selflessness, love and dedication in serving an institution for this long years," he opined. He underlined that PSG has been playing an enormous role in shaping this land (Coimbatore) and paving way for its development. He appreciated the Trust for taking care of its employees and he also appreciated the members of Staff and Faculty for their valuable services to PSG Institutions.



Prof. G.R. Damodaran, fondly called GRD was a great visionary educationist. He was the Founder Principal of PSG College of Arts & Science and PSG College of Technology.

He also served as Vice Chancellor of Madras University and was responsible for much of the educational reforms that took place in the country during the sixties and seventies.

He represented Coimbatore in both the Parliament and in the State Legislature.

He was also the member of the Task Force on Education, Science and Technology of Tamil Nadu's Planning Commission and the Task Force on technical education of the Central Planning Commission. He also chaired a committee on revamping polytechnic education.

## GRD's contribution to education in our country is phenomenal

-L.Gopalakrishnan



Sharing his thoughts about Prof.GRD, L.Gopalakrishnan said "Prof. GRD was a visionary and has no parallel in guiding, motivating and inspiring the faculty members."

"Many of the senior teachers and alumni present here will recall the interaction they had with Prof GRD and how he influenced their career and lives. This is also applicable to several thousands of students who had the privilege of mentorship by Prof.GRD."

He shared that GRD established several healthy conventions which the institutions still follow. His enduring legacy continues to guide us even today. He had a great vision for the growth and development of PSG Institutions and effectively communicated his vision to the faculty who in turn spared no efforts to implement his ideas and plans.

"I am happy to note that generations of faculty and staff drew inspiration from him and worked hard to make our institutions what we are today... This day is an occasion to re-dedicate ourselves to the growth of PSG and all institutions."



*Prof. Radhakrishnan receiving the Lifetime Achievement Award from L.Gopalakrishnan (Right). Also seen are (From Left) K.Prakasan, Principal (i/c), PSG Tech, Iakoka Subramaniam, (3rd left) Prof.Rudramoorthy, Director, PSG CARE and Prof. P.V.Mohanram.*

PSG IMS&R's 29th Graduation Ceremony

# Make the World a better place

## L.Gopalakrishnan, Managing Trustee, PSG & Sons' Charities

The Covai Mail

"Your children not only did their academics here. They participated in so many activities covering humanities, sports, culturals, etc. and we are confident that they are better prepared to engage with the world now," conveyed PSG IMSR's Principal Dr.Subba Rao to the graduates' parents at the college's 29th Graduation Ceremony held on Wednesday.

He said so with pride for many obvious reasons, and among them the most important one is the humanitarian work the graduates did during the pandemic period while they were in their final year as students.

Totally 149 MBBS Graduates, 60 PG Graduates (including Super Specialities) belonging to the 2016-2021 batch of the college attended the ceremony with their family and received their degree certificates from the hands of L.Gopalakrishnan, Managing Trustee, PSG & Sons' Charities.

## Better prepared to engage with the world - Dr.Subba Rao



Speaking about this 2016 Batch students, Dr.Subba Rao said this is the first batch to start a formal literature club in the college, the first to revive and be a part of the editorial board of the research journal of PSG Institutions, the first to start a women's football team and the batch also won the Tamil Nadu Inter Medical College Sports Meet in 2018.

"Covid-19 pandemic caused an unprecedented disruption in medical education and Healthcare systems worldwide"

"Our graduates of today were in their final MBBS year, yet it did not deter them to carry on with their responsibilities as an Organizing Batch (of college's activities)"

"They conducted the most acclaimed Inter medical quiz called AXON, online. It had the most participation from students. When they became Interns, they took over from their seniors as Covid Warriors and continued to defend mankind from the invisible enemy. They lent their time and energy to government agencies when they conducted mega covid-19 vaccination camp in Coimbatore"

He underlined the various activities and accomplishments done by the students of this batch and assured their parents that they are better prepared to engage with the world.



*The Best Outgoing Student Vidula receiving the GV Gold Medal from L.Gopalakrishnan in the presence of Dr.T.M.Subba Rao (2nd Left)*

**"This is the first batch to start a formal literature club in the college, the first to start a women's football team and the batch also won the Tamil Nadu Inter Medical College Sports Meet in 2018.**

*-Dr.Subba Rao"*

## You have what it takes to change the world - L.Gopalakrishnan

The Managing Trustee shared a few words about how Peelamedu in the early part of the twentieth century was underdeveloped with very few opportunities for education and employment, and humbly conveyed how the charitable trust called PSG & Sons' Charities began to make a difference in this part of the district.

He pointed out the number of institutions that have sprung from the PSG & Sons' Charities, and the number of people it has empowered. He shared how the Trust-run Manavar Illam benefits impoverished children who display brilliance, and he also underlined how the Trust-supported Palliative Care center supports the terminally-ill and the less-fortunate people who need this care.

Addressing the new graduates and their parents, he said "Our values have been our source of strength. We believe in our commitment to academic freedom and excellence. Our students and graduates embody this value wherever they go."

"I am happy to share that we are the single largest handler of covid-19 patients. We have had more than 12000 patients admitted with us and we offered outpatient consultations to over 25,000 people of the region. This was possible due to the collective efforts of all concerned and this includes you the graduates. Your service to humanity will never be forgotten."

"Even though the pandemic ruptured many of our schedules and opportunities, you were a determined lot and it is this grit that is seeing you celebrate this graduation ceremony."

"We intend to build additional hostels for the post graduates and add more PG courses, so if you get a chance to choose PSG as your destination for your PG courses, we will be very happy to have you back with this."

"You are beginning a new chapter; whether you are starting a new career, preparing for your post graduate examinations, or just taking a moment of pass to consider the possibilities that lie ahead, I wish you all the very best."

"Believe in yourself you have what it takes to change the world. Take care of yourself and change the world to a better place one step at a time."



*Darshana Srinivasan receiving the GRG Memorial Gold Medal*

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

## National Management Day Celebrations & CMA Awards Ceremony 2022

# To get Sustained Results, **Chase the Process**

**- V.Kovaichelvan,** Director-TVS Institute for Quality and Leadership




*From Left : Jayakumar Ramdass, Deepa Ranganathan, Deepa Venugopal, Megha Asher, Sreepriya, V.Kovaichelvan, M.Krishnan, Rajkumar, Sanjay Kondaas, Nithyanandan Devaraj and K.Krishnakumar, Former Secretary of CMA and Host of the event.*

**David Karunakaran**
The Covai Mail

The World we live in is volatile, uncertain, complex and ambiguous; to deal with it, we need clear vision, understanding of the situation, lucid thoughts and agility. Only with these we can respond to uncertainty.


The above words were shared by V.Kovaichelvan, Director-TVS Institute for Quality and Leadership. He said this at the National Management Day Celebrations & CMA Awards Ceremony 2022 hosted by the Coimbatore Management Association (CMA) on Thursday.

True to what he said, every field is witnessing a drastic change thanks to the pandemic. While the world, specifically the industry is recovering, his talk on the topic "Thriving on Uncertainty: Managing radical change" had many valuable messages to every stakeholder of the industry, be it small, large, micro, medium, start-up etc. His speech, though filled with technical terms, provided thoughts that should be given greater consideration.

On the occasion he presented the CMA Awards to 7 industrious personalities in the presence of Jayakumar Ramdass, President, Nithyanandan Devaraj, Secretary, CMA along with the event Convener Prof.R.Nandagopal.

## Harness the Energy of Change!

*- Jayakumar Ramdass*



"Uncertainty is all around us, never more than today. Whether it concerns a global pandemic, the economy, finances, health, relationship, much of what lies ahead in life remains uncertain," Jayakumar Ramdass underlined.

"Yet, as human beings we crave security. We want to feel safe and have a sense of control over our life and well-being."

"When faced with an unexpected change, we have a choice; fight to regain what was or harness the energy of change to build what can be, one step at a time."

"Thriving in uncertainty will shift the organization's mind set from surviving to thriving by greater acceptance of change as the new normal."

"Organizations should have the ability to shift and respond to the changes in the business environment with corresponding action that is focused, quick and agile."

## **Do Nothing,** Accomplish Everything!

*- V.Kovaichelvan*



Kovaichelvan shared that he visits Toyota's Bengaluru Plant occasionally, and he would be amazed to note that the smaller level workers there always achieve more than 90 marks for their efficiency. He shared that they manage on their own, and they do not require a manager or a supervisor to direct/command them.

He said Management in an organization has to be like this, where a team should naturally adhere to an efficient management system, and work towards excellence. When he said 'Do Nothing, Accomplish Everything' he meant this. But is this possible for all companies, organizations and establishments?

He expressed that it is possible for all companies to attain excellence, even during uncertain periods but for that the organizations should deploy excellent business practices, and every section of staff and employees should contribute.

**Quality & Process**

Kovaichelvan shared that many Indian companies including TVS have adopted techniques like TQM - Total Quality Management for Business Excellence.

Putting TQM in a nutshell, he said companies and their staff should function as one organic entity and keep their focus on the customers' satisfaction and always put Quality on top of everything they do. Simply put, it is 'Customer Focus and Quality First'.

Speaking further, he said that any team that works towards a goal, (for instance 'Outcomes with Quality'), should first develop a Plan, and see whether if they do by that method, they can harvest good outcomes.

If the approach they used provides good results, it should be retained, and taken forward to others, if not they should formulate a new plan and continue to improve till they achieve the right method.

He stressed that greater focus should be given to the process/method by which a work is done. "If you want to get sustained results, chase the process," he said.

He advised that space should not be given for the old mistakes to recur but when new errors arrive, that should be dealt with. He wanted the staff to sense a problem, identify where it is, what caused it and devise a solution.

> If you want to really thrive in uncertainty what you need is a breakthrough.
> **– Kovaichelvan**

**Talents and Breakthroughs**

"If you want to really thrive in uncertainty what you need is a breakthrough," he opined. For the company to attain a Breakthrough, every level of employee should provide certain results, he said.

The staff at the lower level must be consistent with their work and outcomes, whereas the ones in the middle should try to improve their outcomes; only when these two levels of employees do these, the staff at the top level can focus on breakthroughs.

This brings us to the next important section… Talents. For innovation and continuous improvement, we need talent management, Kovaichelvan opined.

We need to have both Talents and Technologies to solve complex problems and achieve quality outcomes. Temporary or permanent, all staff need to be skilled, he shared.

He compared two methods that employers follow when they deploy their workforce to a task; they either follow 'Do and Learn' or 'Learn and Do'. When a poorly skilled staff is asked to do a task and learn from it, it creates problems. So if organizations upskill and fine tune their staff, and then deploy them to do a task, the results can be expected to be optimum.

He also wanted the people to take a look at how technologies like Artificial Intelligence, Machine Learning, Robotics are evolving and becoming interdisciplinary, and underlined that it is time for the staff in organizations to become transdisciplinary.

He acknowledged that companies becoming future-ready with all these attributes in an uncertain period, like today would be a herculean task, but he encouraged Coimbatore Management Association and others like them to mobilize academia and management practitioners to come together, co-create high impact modular courses which can eventually prepare industries for uncertainty and radical change.

## Be Dharmic, **Keep Customers Happy**

*- M.Krishnan, MD, Sri Krishna Sweets*

**CMA Roots Entrepreneur of the Year 2022 Awardee**



Accepting the award, M.Krishnan was asked about the things that guided him in his journey as an entrepreneur.

He said that when a person starts and runs a business, he should keep his trade between the shores of Righteousness and Customers' Satisfaction & Happiness. He opined that if business runs within these two shores, it will garner the public's love and response, in a natural way.

He recollected the words of Swami Dayanada Saraswathi "Be a Contributor, not just a consumer", and shared that it is only right to give back to the society, and in the Dharmic path, he undertakes programs by joining hands with society that benefits the public.

## **Emotions have helped** me in my journey

*- Megha Asher, Co-Founder, Juicy Chemistry*

**CMA GRG Women Entrepreneur Awardee**



Megha was asked about the quality that helped her in her entrepreneurial journey, and she shared that it was her emotions. She said that she had often told her husband Pritesh that she can be a good entrepreneur but not a good business owner. She explained that she felt so because, being a woman, one tends to put more emotions in business. "Sometimes it may not be the best decision but it makes you stand out. As women we are gifted with the ability to look at things not only practically all the time, but look at the other side of it". She said that this quality has always been helpful in her journey.

This might be the first time in the recent years that women have outnumbered men in the list of awardees. All of them had few wise words to share at the event, and it was illuminating to listen.

## God guides us in the **right direction**

*- Sanjay Kondaas, Owner, Kondaas Automation*

**CMA Mahendra Pumps Best SME Entrepreneur Awardee**



Sanjay shared that in 2010 he wanted to take dealership of Tata in Covai while at the same period Tamilnadu Energy Development Agency was looking for people who can provide Solar support under CM's Solar Rooftop Capital Incentive Scheme in the State to 10000 homes.

He decided to go with TEDA's scheme and took a leap of faith. Between 2012 - 2015, of the 7000 homes, Kondaas took 3,500 homes under their wings. But when the scales increased when they set foot in Kerala, he once again took a leap of faith, and according to him God had guided him in the right direction. Now Kondaas is looking to become the 4th largest player in solar sector in India.

## Authenticity & Unbiasedness **keep us moving**

*- D.Rajkumar, GM- Circulation, Hindu Tamil Thisai*

**CMA DJ Best Professional Corporate Leader Awardee**



When D.Rajkumar was asked about the challenges faced in launching Hindu Tamil Thisai (HTT), he said that the team understood that every field has its own competitions, and the media is also becoming competitive.

Hence they had strategies formed in and out. He shared that they did not aim to be No.1 but be swift in the field. He credited that coming from the house of The Hindu, the brand and the legacy that comes with it gave them great propulsion to move ahead. He said that Authenticity and Unbiasedness are the qualities that keep HTT moving, and he added that the launch of HTT solved a wish/problem that was prevailing among many newspaper readers; they wanted The Hindu's news in Tamil, and that has been resolved with the launch of HTT.

## Research could **open many frontiers**

*- Prof. Deepa Ranganathan, PSG IM*



**CMA STC Best Management Researcher Awardee**

When Prof. Deepa was asked whether enough focus is given for management research in Academia and Industry, she replied "of course enough impetus is given for research. Based on my experience, I would vouch that Research could open many frontiers to you"

She shared that her research work has taken her to other organizations and PSUs like Indian Oil Corporation that need her consultancy, so she replied positively that enough impetus is given for Management Research in the industry.

## **Passion** & Purpose *- Sreepriya, Astrix Engineers*

**CMA Quadra Best Startup Awardee**



Accepting the Best Startup Award, Sreepriya shared "our intentions while starting this business (smart door locks) was not just our passion, it was also to build a purpose to that". She said that one constant fear people tend to have is safeguarding their beloved and belongings at their respective houses.

To address this problem, Astrix Engineering developed indigenously made smart solutions in the form of Smart Door Locks. She said that her company is a small speck in the world of smart techs, and they wish to make it grow big with the support of everyone.

## Create managers to **solve real-time problems**

*- Prof. Deepa Venugopal, DJ AME*

**CMA GRD Best Management Faculty Awardee**



In her acceptance speech, Prof. Deepa Venugopal said that modern management schools should be trying to create wisdom rather than knowledge.

As organizations hire Managers to solve problems, she emphasized that management schools should be working to make their students Problem solvers. She pointed out that the speed at which problems pop-up in business is quick, and how a manager faces problems, differentiates him/her.

*Photos: Sathis Babu*

## பி.எஸ்.ஜி பார்மசி கல்லூரியில்

# 15வது பட்டமளிப்பு விழா

திி கோவை மெயில்

பி.எஸ்.ஜி பார்மசி கல்லூரியின் 15 வது பட்டமளிப்பு விழா பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. பி.எஸ்.ஜி பார்மசி கல்லூரியின் முதல்வர் ராமநாதன் வரவேற்புரை வழங்கினார்.

பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன் நிகழ்விற்கு தலைமை தாங்கி தலைமை உரை ஆற்றினார்.

பாரதியார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் காளிராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டமளிப்பு சான்றிதழ்களை வழங்கினார்.

பட்டமளிப்பு விழாவில் 2014 முதல் 2018 வரையிலான கல்வி ஆண்டுகளில் பயின்ற இளங்கலை மற்றும் முதுகலையைச் சேர்ந்த 260 மாணவ மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

துணைவேந்தர் காளிராஜ் பேசுகையில், பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, எதிர்காலத்தில் அவர்களுக்கு இருக்கும் வேலை வாய்ப்பு பற்றிக் கூறினார். இந்தியா, பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடு என்பதையும், நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

பார்மசி மாணவர்களுக்கான உறுதிமொழியை பேராசிரியர் ப்ரூடன்ஸ் வழிமொழிந்தார்.

தொடர்ந்து கல்லூரியில் படிப்பு விளையாட்டு என சிறந்து விளங்கிய மாணவ மாணவிகளுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டது. மேலும் கல்லூரியின் சிறந்த மாணவர்களுக்கான விருதும் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறந்த மாணவர்களுக்கான 'பி.எஸ். கோவிந்தசாமி நாயுடு' விருதை பார்மசி இளங்கலை மாணவிகள் ஜாய் கிறிஸ்டி, தர்ஷினி மற்றும் பார்ம் டி மாணவிகள் டோனியா லாரன்ஸ், சுலேகா ஆகியோர் பெற்றனர்.



பாரதியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் காளிராஜ், சிறந்த மாணவர்களுக்கான 'பி.எஸ். கோவிந்தசாமி நாயுடு' விருதை பார்மசி இளங்கலை மாணவி ஜாய் கிறிஸ்டிக்கு வழங்குகிறார்.

## போஷ் நிறுவனம் சார்பில்

# 25,000 மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்கம்

திி கோவை மெயில்

போஷ் குளோபல் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் அதன் 25 ஆண்டுகால மரபைக் கொண்டாடும் வகையில் 25,000 மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறியளவிலான இந்த காடு வளர்ப்பு முயற்சிக்காக "பாரஸ்ட்ஸ் பை ஹார்ட்ஃபுல்னெஸ்" அமைப்புடன் கைகோர்த்துள்ளது.

போஷ் குளோபல் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் மொபிலிட்டி என்ஜினியர் மற்றும் மெம்பர் ஆஃப் எக்சிக்யூடிவ் லீடர்ஷிப் - எஸ்விபி ஆர்கே ஷெனாய் இந்த முயற்சி குறித்து கூறும்போது, மரக்கன்றுகள் நடும் இந்த முயற்சி சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்பாடுகளுக்கு நாங்கள் அளிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இந்தியாவில் நாங்கள் 25 ஆண்டு காலமாக செயல்பட்டு வருவதைக் கொண்டாடும் வகையிலும் சமீபத்தில் போஷ் குளோபல் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் என்கிற பெயரில் ரீபிராண்ட் செய்யப்பட்டதையும் இந்த முயற்சியின் மூலம் கொண்டாட இருக்கிறோம். ஏரிகள் புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளை போஷ் குளோபல் சாஃப்ட்வேர் டெக்னாலஜிஸ் மேற்கொண்டு வருகிறது என்பதையும் கூறினார்.

ஹார்ட்ஃபுல்னெஸ் பிரெசிடெண்ட் மற்றும் வழிகாட்டி கமலேஷ் படேல் கூறும்போது, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் வருங்கால தலைமுறையினருக்காக பசுமைப் போர்வையை அதிகரிக்கவும் நாங்கள் ஃபாரஸ்ட்ஸ் பை ஹார்ட்ஃபுல்னெஸ் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இயற்கையான சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்கு ஏராளமான தாவரங்கள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். இந்த அளவை எட்டுவது என்பது ஒரே நாளில் ஒரே ஒரு நிறுவனத்தின் முயற்சியால் சாத்தியமாகாது. கார்ப்பரேட்கள், அரசாங்கங்கள், என்ஜிஓக்கள், வனவியல், தனிநபர்கள் என அனைத்து பங்குதாரர்களும் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்றார்.

ஃபாரஸ்ட் பை ஹார்ட்ஃபுல்னெஸ் தனியுரிமை பெற்றுள்ள ஹார்ட்டிகல்சர் ஹை டென்சிடி மரக்கன்றுகள் நடும் முறையைப் பயன்படுத்தி 25,000 மரங்கள் நடப்பட உள்ளது.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில்

# இண்டஸ்ட்ரி 4.0 மையம் திறப்பு

திி கோவை மெயில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியின் ரோபாட்டிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் துறையானது, பெங்களூரு விப்ரோ பாரி உள்கட்டமைப்பு - வின் ஆட்டோமேஷன் சொல்யூஷன்ஸ் உடன் இணைந்து, ஸ்மார்ட் உற்பத்தி மற்றும் தொழில்துறை 4.0 மையத்தை கல்லூரி வளாகத்தில் நிறுவியுள்ளது.

இந்த மையத்தை, வின் ஆட்டோமேஷன் சொல்யூஷன்ஸ் மூத்த துணைத் தலைவர் சுந்தரராமன் மற்றும் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசுவாமி ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் அலமேலு அனைவரையும் வரவேற்றார்.

இந்த மையத்தில், கோபோட், மெஷின் விஷன் சிஸ்டம், இண்டஸ்ட்ரியல் ஐஓடி, தானியங்கி வழிகாட்டி வாகனங்கள், கோபட்களின் கட்டுப்பாடு மற்றும் செயல்முறைக்கான மென்பொருள் ஆகியவை உள்ளன. மேற்கூறிய வசதிகளை கொண்டு, இயந்திரங்கள் மற்றும் பலவடிவங்களை கொண்ட பொருள்களை கையாளுதல், அவற்றின் செயலாக்கம், ஆறு அணுகுமுறை அமைப்புடன் கூடிய ரோபோ செயல்முறை கட்டுப்பாடு, பொருள் போக்குவரத்திற்கான தானியங்கி வழிகாட்டி வாகனங்கள் மற்றும் சேர்க்கை உற்பத்திக்கான 3டி பிரிண்டர் ஆகியவற்றிற்கான அதிநவீன வசதிகளை உருவாக்கி பயன்படுத்த ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் போது வின் ஆட்டோமேஷனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. இந்த மையம், தொழில்துறை 4.0, ஸ்மார்ட் தொழிற்சாலை மற்றும் உற்பத்தி, இயந்திரம் கையாளும் முறை வடிவமைப்பு மற்றும் ரிவெர்ஸ் இன்ஜினியரிங் துறை ஆகியவற்றில் மாணவர்களின் திறமையை எளிதாக்கும்.

இந்த மையத்தை தொழில்துறையினர் ஸ்மார்ட் உற்பத்தியை நோக்கி செல்ல பயன்படுத்தலாம். இந்த வசதியில் பயிற்சி பெற்ற மாணவர்கள், வின் ஆட்டோமேஷன் மூலம் இன்டர்ன்ஷிப் மற்றும் வேலை வாய்ப்புகளைப் பெறுவார்கள்.



இண்டஸ்ட்ரி 4.0 மையத்தில் அமைந்துள்ள இயந்திரத்தை வின் ஆட்டோமேஷன் சொல்யூஷன்ஸ் மூத்த துணைத் தலைவர் சுந்தரராமன், எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணசுவாமி, கல்லூரி முதல்வர் அலமேலு ஆகியோர் பார்வையிடுகின்றனர்.

# அரசுப்பள்ளி புதுப்பிப்பு

திி கோவை மெயில்

ஈரோடு வீரப்பன்சத்திரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் உள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் மேம்படுத்தப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட இந்த கட்டிடங்கள் திருமகன் ஈவெரா எம்எல்ஏ முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டன.

ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஆற்றல் அறக்கட்டளை சமுதாய முன்னேற்றத்திற்காக பல உதவிகளை செய்து வருகிறது.

ஆற்றல் பவுண்டேஷன் திட்டங்களாக கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மொடக்குறிச்சி, லக்காபுரம், காங்கேயம், பழையகோட்டை, புதூர், சென்னிமலை, எக்கட பாளையம் ஊராட்சி பள்ளிகள் புதுப்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

கடந்த வாரம் வெள்ளகோவில் நகராட்சி பள்ளி வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் புதுப்பிக்கப்பட்டு ஊராட்சி அமைப்பு தலைவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.